# நற்றமிழ்க் குடில்

தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய இதழ்**

குடில் : 2 | பிப்ரவரி 2020 | விருந்து : 6




**உ.வே.சா**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

- தனிச்சுற்று -

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : மு. சத்யா
முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு.

அ. ஸ்டெல்லா மேரி
அ. பர்ஸானா
ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

அ. உமா மகேஸ்வரி
சா. யோகேஸ்வரி
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம.சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

பேராசிரியர் சே.கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி, சென்னை - 600 099.

விலை : ரூ.15/-

அச்சு : "ஸ்பெஷல் எபெக்ட்ஸ்"
மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர்
பேசி : 9282142789

# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

கலை மற்றும் அறிவியல் மகளிர் ... தமிழ்த்துறை
10

குடில் : 2 விருந்து : 6

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
பிப்ரவரி 2020

## உள்ளே.......

தலையங்கம்
அறிவோம் அறிஞரை
தோழிக்குக் கடிதம்
கட்டுரை
சிறுகதை
கவிதை
விடுகதைகள்
சொல் விளையாட்டு
தூரிகைத் தூரல்கள்
பொன்மொழிகள்

தலையங்கம்

# சங்க நூல்களைச் சாகாது வழங்கிய டாக்டர் உ.வே.சா.



தமிழ் மொழிக்குப் புதிய ஒளியைக் கொடுத்த உ.வே.சாமிநாதன் பிப்ரவரி 19, 1855ஆம் ஆண்டில் உத்தமதானபுரம் எனும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் - சரஸ்வதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். உ.வே.சாவின் தந்தையார் சங்கீதத்தால் அனைவரையும் மகிழ்விக்கும் ஆற்றல் உடையவர். உ.வே.சா தனது தொடக்கத் தமிழ்க் கல்வியையும், இசைக் கல்வியையும் சொந்த ஊரில் உள்ள ஆசிரியர்களிடம் கற்றார். பின்னர் 17ஆம் வயதில் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ்க் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற தமிழறிஞர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் பயின்று தமிழறிஞர் ஆனார். உ.வே.சா. கும்பகோணத்திலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

உ.வே.சா இல்லையென்றால் தமிழுலகிற்குச் சிலப்பதிகாரத்தைப் பற்றித் தெரியாமலே போயிருக்கும். அகநானூற்றிற்கும், புறநானூற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மறைந்திருக்கும். இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி, பதிப்பித்துத் தந்தவர் உ.வே.சா., தன் சொத்துக்களையும் விற்று பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். இவர் குடும்பம் தீராத வறுமையில் வாடியது. தமது குடும்பம் பிழைப்பதற்கும், இவர் கல்வி கற்பதற்கும் இவர் தந்தை மிகுந்த முயற்சி எடுத்துள்ளார். இவர் குடும்பம் ஓர் ஊரில் நிலையாகத் தங்குவதற்கு வசதியில்லாமல் ஊர் ஊராக இடம் பெயர்ந்து வாய்ப்புகளைத் தேடியலைந்துள்ள போதிலும் மனம் தளராமல், இவ்வளவு கடினமான சூழ்நிலையிலும் தமிழை விடாமுயற்சியுடன் கற்றுக் கொண்டுள்ளார். உ.வே.சா., சிறுவயதில் விளையாட்டிலும்

இசையைக் கற்பதிலும் ஆர்வமுடையவராயிருந்தார். உ.வே.சா., கவிதை எழுதும் கலையையும் பயின்றவர்.

உ.வே.சா தமது தந்தையாருடன் சென்று இராமாயண விரிவுரையில் உதவி செய்துள்ளார். உ.வே.சா.வின் தந்தை உ.வே.சா.விற்கு திருமணம் செய்ய முடிவு செய்தார். உ.வே.சா.விற்கு 14 வயது. அவர் மனைவிக்கு எட்டு வயது. இருவருக்கும் திருமணம் முடிந்தது. நிறைந்த தமிழ் புலமை, எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல், இசைப்பயிற்சி, அன்பு முதலிய இயல்புகளைப் பெற்றிருந்தமையால் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளத்தை எளிதில் கவர்ந்தார். 1919ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். ஆனாலும் நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியத் தொண்டிலிருந்தோ ஓய்வு பெறவில்லை. 1924 முதல் 1927 வரையில் ராஜா அண்ணாமலை செட்டியவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராக இருந்தார். சங்க நூல்களைச் சாகாது வழங்கியதால் "தமிழ்த் தாத்தா" என்று அன்புடன் போற்றப்படுகிறார்.

1948ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆறாம் தேதி சென்னை அரசினர் கல்லூரியில் உ.வே.சா.விற்கு முழு உருவச் சிலை நிறுவினார்கள். தமிழ்க் கடலின் விரிவை மீட்டு தமிழுலகத்துக்குக் காட்டிய உ.வே.சா.வின் திருவுருவம் பெருங்கடலை நோக்கி நிற்கும் கோலத்தைக் கண்டு மகிழ்வோம்.

உ.வே.சா வின் தமிழ்ப்பணியைப் போற்றுவோம்

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

**மு.சத்யா**

முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

**பொன்மொழிகள்**

முடியாது என்று நீ சொல்வதை எல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கிறான். - அப்துல் கலாம்



# பூதத்தாழ்வார்

ஆ.ஹேமலதா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

கோயில்கள் நிறைந்த தொண்டை மண்டலத்தில் அலைகள் தவழும் அழகிய கடற்கரை ஓரத்தில் அமைந்த நகரம் திருக்கடல்மல்லை. இக்கடற்கரைக்கு அருகிலே அழகான கோயில் ஒன்று அமைந்திருந்தது. அத்தலத்தில் உறையும் இறைவனை அடியார்கள் பலர் போற்றிப் பாடியிருக்கிறார்கள். நூற்றெட்டு வைணவத் தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் அத்தலத்துக்கு மற்றுமோர் சிறப்பு உண்டு.

முதலாழ்வார்கள் மூவரில் இரண்டாமவரான "பூதத்தாழ்வார்" இங்கு தான் அவதரித்தார். மிகப் பழமையான நகரமான திருக்கடல்மல்லை இப்போது மாமல்லபுரம் என்றும், மகாபலிபுரம் என்றும் வழங்கப்படுகிறது. இத்தலத்திற்கு மற்றுமொரு சிறப்பு உண்டு. பொதுவாக வைணவத் தலங்களில், ஸ்ரீமந் நாராயணன் நின்றபடி காட்சியளிப்பார். சில தலங்களில் வீற்றிருப்பார். சில தலங்களில் பள்ளி கொண்டிருப்பார்.

இத்தலத்தில் மட்டும் வெறும் தலத்தில் துயில் கொண்டுள்ளார். எனவே தான் இத்தலத்தை "தல சயனம்" என்று அழைக்கிறார்கள். பூதத்தாழ்வார் திருமாலின் ஈடு இணையற்ற அழகை எந்நேரமும் தன் மனக்கண்ணால் பருகி, அவன் புகழ் பாடுவதையே பணியாகக் கொண்டிருந்தார். மற்ற உலகியல் நிகழ்வுகளில் எதிலும் அவருடைய மனம் செல்லவில்லை.

உலகப் பற்றறுத்த உத்தமராக விளங்கிய பூதத்தார் பெருமாளுக்குப் பூமாலைச் சூட்டி மகிழ்ந்தார். முழுமுதற் கடவுளான திருமாலிடத்தே பற்று கொண்டு ஆராக் காதலுடன் பாடியாடி அகம்

குளிர முகம் மலர அப்பெருமானின் திருவடிகளுக்கு நாள்தோறும் பாமாலையும் சாற்றி வந்தார். திருமாலின் திருப்பெயர்களை எப்போதும் சொல்லிக் கொண்டே காலம் கழித்து வந்ததால் அவரைக் கண்டோர் "தெய்வப் பிறவி" எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

பூதத்தாழ்வார் பாடிய பாடல்கள் நூறு வெண்பாக்களால் ஆன இரண்டாம் திருவந்தாதியாகும்.

யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம் உடையேன் எம்பெருமான்!
யானே இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கேச்
சொன்னேன்;
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

பூதத்தாழ்வார் தன்னைப் பெருந்தமிழன் என்கிறார். எல்லாப் பிறவிகளிலும் எப்போதும் தவம் புரிந்த நான் அத்தவத்தின் பயனை இப்போது பெற்றேன். தமிழில் தொடுத்த சொல் மாலைகளைத் திருமாலின் திருவடிகளில் செலுத்தும் பேறு பெற்றேன் என்று தமிழால் தான் அடைந்த பேறினை எண்ணி மகிழ்கிறார்.

## பூதத்தாழ்வாரின் பிறப்பு:

இவர் கடல்மல்லையில் (மாமல்லபுரம்) நறுமணம் வீசித் திவ்வியமாய் இருப்பதொரு குருக்கத்திப் பந்தலில் ஒரு குருக்கத்தி மலரில் ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் திருமாலின் "கௌமோதகி" என்னும் கதையின் கூறாகப் பிறந்தார். கௌமோதகி என்பது திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான தண்டு ஆகும்.


முதலாழ்வார் மூவர்க்கும் சேனையர் கோன் என்பவர் தான் முத்திரைத் தானம் செய்து எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். வைணவர் தோள்களில் சங்கு சக்கரத்தைப் பொறித்துக் கொள்வதை முத்திரைத் தானம் பெறுவது என்பர். அதன் பின்னர் தான் "ஓம் நமோ நாராயண" என்ற எட்டெழுத்து மந்திரத்தை (குரு) ஆசிரியர் மூலமாக உபதேசம் பெறுவர்.

ஓதாது உணர்ந்த பூதத்தாழ்வார் அனைத்துக் கலையிலும் வல்லவராய் விளங்கினார். செந்தமிழைச் சிறக்கக் கற்ற அவர்

பைந்தமிழிலேயே பாசுரங்கள் பாடியருளினார். பூதத்தாழ்வாரின் சில பாடல்கள் திருமாலின் உறுப்பை விளக்குவதாக உள்ளது. சில பாடல்கள் திருமாலின் பேரழகைத் திறம்படக் காட்டுகின்றது. சில பாடல்கள் திருமாலின் திருப்பெயர்களை அறிவிக்கின்றது. இவ்வாறு பல கோணங்களில் பரந்தாமனின் பெருமையைப் பாரவர்க்குப் பகர்ந்தவர் பூதத்தாழ்வார்.

மண்ணுலகில் மதிமயங்கி வாழும் மக்களே! "நெஞ்சில் கோழை அடைபட்டு நெருக்குதற்கு முன்", திருமாலின் திருவடிகளை நினைக்க வேண்டும். திருமகள் வீற்றிருக்கும் திருமார்பையுடைய அரங்கநாதனின் திருவடிகளே அனைத்தையும் தரவல்லது. எனவே திருமாலின் திருவடிகளைப் போற்றுவோம்.

## வாகையின் வித்து



*அறியாமை என்பதே*
*உந்தன் பிழை!*
*ஊனம் என்பதை*
*உணர்வுக்குள் மறை!*
*அவமானம் என்பதை*
*அகத்தில் சிதை!*
*தோல்வி என்பதே*
*உன் உழைப்புக்கு சிறை!*
*முயற்சி என்பதே*
*வெற்றிக்கு விதை!*

ஜோ.தீபிகா
உயிர்வேதியியல் இரண்டாமாண்டு

# இந்தியா 2020



"இந்தியா 2020" என்ற நூலில் கலாம் இந்தியா அறிவியலிலே வல்லரசு நாடாகவும், வளர்ந்த நாடாகவும், 2020ஆம் ஆண்டிற்குள் மாறுவதற்குரிய வரைவுத் திட்டத்தை அறிவித்திருந்தார். எதிர்கால வல்லரசுகளில் ஒன்றாக இந்தியா இடம் பிடிக்க இந்திய அணு ஆயுத திட்டத்திற்கு தனது பணியை அர்ப்பணிக்கிறார்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளின் வேறு பல வளர்ச்சிகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் தொடர்ந்து பணியாற்றும் கலாம் உயிரி செயற்கை பதியன்கள் [B10 - IMPLANTS] வளர்ப்பதற்கான ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை முன்மொழிந்திருக்கிறார். அவர் தனியுரிமை தீர்வுகள் மீது திறந்த மூல ஆதரவாளராகவும் மற்றும் பெரிய அளவிலான இலவச மென்பொருள் பயன்படுத்துதல், பெருமளவு மக்களுக்குத் தகவல் தொழில் நுட்ப நன்மைகளைக் கொண்டு வரும் என்றும் நம்புகிறார்.

அறிவியலாலோசகர் பதிவியிலிருந்து 1999இல் பதவி விலகிய பிறகு, ஒரு இலட்சம் மாணவர்களுடன் இரண்டு ஆண்டுகளுக்குள் கலந்துரையாட வேண்டுமென்று குறிக்கோள் வைத்திருந்தார்.

"2020" அப்துல் கலாமின் கனவை நனவாக்கும் வழியை இளைஞர்களாகிய நாம் கண்டடைய முயல்வோம்.

**சௌந்தர்யா ரூ.**

கணக்கியல் மூன்றாமாண்டு



# தோழிக்குக் கடிதம்...



அன்புள்ள தோழி!

நான் இங்கு நலம். நீயும் உன் பெற்றோரும் நலமுடன் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

இன்று கடிதம் எழுத என்ன அவசியம் என்று கருதலாம். மேலே படி உனக்கே புரியும்.

முகநூலில் நான் பார்த்து நெகிழ்ந்த ஒரு. கணவன் மனைவியின் உண்மை சம்பவத்தை உன்னிடம் பகிர ஆசைப்படுகிறேன்.

திருமணத்திற்குப் பிறகு பணிபுரிய தனது மனைவியைப் பிரிந்து வெளிநாட்டிற்குச் சென்றான் கணவன். ஒருநாள். வீட்டிலிருந்த அவனது மனைவிக்குத் தீ விபத்து ஏற்பட்டு முகம் சிதைந்து கருகி அழகற்ற தோற்றமொடு காணப்பட்டாள். இதனைத் தனது கணவன் அறிந்தால் எங்கு மனம் உடைந்து

விடுவானோ? தன்னை வெறுத்து ஒதுக்கி விடுவானோ? என்று எண்ணி தனது துயரத்தைத் தனக்குள்ளே வைத்துக் கொண்டாள் அம்மனைவி.

சில மாதங்களுக்குப் பிறகு, வெளிநாட்டிலிருந்து தன் மனைவியைக் காண வந்த கணவன், கண் பார்வை இழந்து கண்ணாடி அணிந்த தோற்றமோடு தன் மனைவி முன் நின்றான். அதைக் கண்டவுடன் அவள் அதைப் பொருட்படுத்தாமல் கணவனது அனைத்து தேவைகளையும் அன்புடன் பூர்த்தி செய்தாள். காலமும் சென்று கொண்டே இருந்தது... திடீரென்று ஒருநாள் நுரையீரல் பாதிப்பால் அம்மனைவி இறந்து விடுகிறாள். அவளது இறுதிச் சடங்கை முடித்த கணவன் யாருடைய உதவியின்றியும் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது, அவனைக் கண்ட அவனது நண்பன், நீ ஏன் தனியாக நடந்து வருகிறாய்? துணைக்கு என்னை அழைத்திருக்கலாமே? என்று கேட்டான். உடனே அக்கணவன், 'தன் மனைவிக்கு ஏற்பட்ட துயரத்தை வெளிநாட்டில் இருக்கும் போதே என் அண்ணன் மூலம் முன்னரே அறிந்தேன் என்று கூறினான். என் மனைவி கவலை கொள்ளாமல் இருப்பதற்காக தனக்கொரு குறை இருப்பது போல் நடித்துக் கொண்டிருந்தேன்' என்றான். இதனைக்

கேட்ட நண்பன் கண் கலங்கியவாறு அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

ஆகவே, பிறரின் உடல்ரீதியான குறையாக இருந்தாலும், மனரீதியான குறையாக இருந்தாலும் அதை மறைத்து பொருட்படுத்தாமல் வாழ்வதே சிறந்தது.


பிறரின் உடல்ரீதியான குறையைக் குறைவாகக் கருதாமல் நிறைவாகக் கருதி வாழ்வதே சிறந்தது.

இக்கால கட்டத்தில் சிறு சிறு பிரச்சினைகளுக்குக் கூட விவாகரத்து செய்யும் கணவன் மனைவிக்கு மத்தியில் இக்கணவன் மனைவியின் கதையை உன்னிடம் பகிர்ந்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிகழ்வு என்னில் ஒரு புதுவிதமான அனுபவத்தை உணர்த்தியது. அந்த அனுபவத்தை நீயும் உணர விரும்பினேன். ஆதலால், இக்கடிதத்தை எழுதினேன். உன் மறுகடிதத்திற்கு ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி
**ர.பாத்திமா ஸுபேரியா**

# ஐந்து ரூபாய்



அவன் சற்றும் எதிர்பாராத ஒரு கணத்தில் தான் அது நடந்து போனது.

மார்க்கெட்டிற்குள் நுழையும் போது வாசற்படியில் அந்தக் காட்சியைக் காண நேரிட்டது.

கொளுத்தும் வெய்யிலில் தரையில் ஒரு கால் விளங்காமல் படுத்தபடி ஒரு பெண். அவள் அருகே கொஞ்ச மாதங்களுக்கு முன் பிறந்த குழந்தை நைந்து துணியில் கிடந்தபடி...... அதை ஒட்டி இரண்டு சிறுமிகள். இரண்டின் வயிறும் பசியால் ஒட்டியபடி..... கண்களில் பாதாளம். பிஞ்சு விரல் நீட்டி, பேசுவதற்குக் கூடச் சக்தியில்லாமல்.......

சட்டைப் பாக்கெட்டினுள் எதேச்சையாகக் கை நுழைத்தான். இருந்த சில்லறைகளில் ஒன்றை எடுத்து அவர்கள் முன் போட்டு விட்டுப் போகலாம் என்று சாதாரணமான எண்ணத்துடன் தான் பாக்கெட்டில் கை நுழைத்தான்.

நுழைத்த வேகத்தில் விரலில் ஒரு காகிதம் தட்டுப்பட்டது. பஸ் டிக்கெட் தான் என்று நினைத்து அவசரமாக அதை வெளியே வீச அது ஐந்து ரூபாய்த் தாள்! வீசிய வேகத்தில் காற்றில் வேகமாய்ப் பறந்து அதைப் பிடிக்க முயலுவதற்குள் அந்தச் சிறுமிகளின் காலடியில் போய் விழுந்தது!

அவன் ஸ்தம்பித்து நின்றான். ஒரு குழந்தை அதை எடுத்துப் பார்த்து விட்டு லேசாக அவனைப் பார்த்துச் சிரித்தது. உள்ளங்கைக்குள் இறுக்கிக் கொண்டது.

“உருப்படியா என்ன வேலை செய்யறே? உன்னால் எப்பவும் தண்டம் தான்.....”

ஆபீஸில் மானேஜர் அடிக்கடி திட்டுவது உண்மை தானோ?

வெகுநேரம் சுற்றிக் காய்கறி வாங்கி விட்டுத் திரும்பி வந்தவன் கண்களில் அந்தக் காட்சி தென்பட்டது.

சற்றுமுன் பசியால் கதறிக் கொண்டிருந்த அந்தச் சிறுமிகளின் முன் இட்டிலி.

ஓட்டல் கடை இட்டிலி, இலையில் சட்னி, சாம்பாருக்கிடையே குவியலாய் இட்டிலி கிடக்க, குழந்தைகள் அதை ஆர்வத்தோடு தின்று கொண்டிருந்தன.

அந்தக் கண்களில் என்னவொரு மகிழ்ச்சி.

அந்தப் பெண் தன் கைக்குழந்தைக்குக் கண்ணாடி டம்ளரில் வாங்கிய பாலைப் புகட்டிக் கொண்டிருந்தாள்.

“உருப்படியா என்ன வேலை செய்யறே” என்றாரே மானேஜர். இதோ செய்திருக்கிறேன்! ஒரு குடும்பத்திற்கு உதவி செய்திருக்கிறேனே.

கோ.யாமினி

இளங்கலைப் பொருளாதாரம் - முதலாமாண்டு.

## அறிந்து கொள்வோம்

1. மிகப் பெரிய முதுகெலும்புடைய மீன் - நீலத் திமிங்கிலம்
2. மிகச் சிறிய முதுகெலும்புடைய மீன்
   - பிலிப்பைன் கோபி மீன்
3. ஒரு தேனீ தனது வாழ்நாளில் சேகரிக்கும் தேன்
   - 1/2 தேக்கரண்டி
4. நமது உடலில் உள்ள இரத்த சிவப்பு அணுக்கள் எத்தனை நாட்களில் இறந்து மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன
   - 120 நாட்கள்.
5. முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட வைட்டமின்
   - வைட்டமின் ‘A’
6. ஒரு நீலத் திமிங்கிலத்தின் எடை எத்தனை எடைக்குச் சமம்
   - 30 யானைகளின் எடை

**சை.ஸபானா மதீனா பேகம்**, உயிர் வேதியியல். இரண்டாமாண்டு.

கட்டுரை



# தேசிய அறிவியல் நாள்

தேசத் தலைவர்கள் மற்றும் தியாகிகளைக் கொண்டாடுவது போல அறிவியல் மேதைகளைப் போற்றப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் கொண்டாடப்படும் நாள்.

1987-ஆம் ஆண்டு இந்த நாள் அந்நிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இந்நாள் கொண்டாடப்படுகிறது.

எந்த ஒரு நாகரீகத்திற்கும் அடிப்படையான அறிவியலின் சிறப்பை இளம் தலைமுறை மாணவர்களுக்குக் கூறும் வகையிலும், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பல புதிய அறிவியல் சிந்தனைகளைக் கண்டறிவதும், அதனைத் தகுந்த முறையில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், புதிய கண்டுபிடிப்புகளை வரவேற்பதுமே அறிவியல் அறிஞர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான நன்றிக் கடன் என்பதே இந்நாளின் நோக்கம்.

இந்த மண்ணில் பிறந்து உலகம் போற்றும் வகையில் பல அரிய கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து வெளியிட்டவரும் சிறந்த இயற்பியல் மேதையுமான "சர்.சி.வி.ராமன்".

தன்னுடைய நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்ட பிப்ரவரி 28ஆம் தேதி "தேசிய அறிவியல் தினம்" என அறிவிக்கப்பட்டது. "சி.வி.ராமன்" தன் புகழ் பெற்ற "ராமன் விளைவை". இந்நாளிலே கண்டுபிடித்தார்.

இந்நிகழ்வின் நினைவாகவும் அறிவியல் என்பது அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடும் இந்திய அரசு இந்நாளைத் "தேசிய அறிவியல் நாளாகப்" பிரகடனப்படுத்தியது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அறிவியல் முக்கிய பங்கு வகிக்கிறது. அறிவியலைப் பரப்புவதற்காக சிறப்பாக செயல்படும் நிறுவனங்கள், தனி நபர்களுக்குத் தேசிய விருதினை இந்த நாளில் வழங்குகின்றன.

கே.துர்கா
உயிர்வேதியியல் முதலாமாண்டு




# என் கல்லூரி

வாசலுக்குள் நுழையும் முன்பே மனதில்
அமைதியை ஏற்படுத்தும் கோயில்!
நுழைந்த பின்போ தந்தையின் தோள்
போல் அரவணைக்கும் கரங்கள்!

என் கல்லூரி இயற்கைக் காற்றிற்கு
என்றுமே ஈடாகாது என் வீட்டு ஏசிக்காற்று!
தாயின் கருவறைப் போல் விளங்கும்
என் கல்லூரி வகுப்பறை!

தன் பிள்ளைப் போல்
நம்பி வந்த பிள்ளைகளையும்
பேணிக் காக்கும் ஆசிரியர்கள்
நான் போற்றி வணங்கும் தெய்வங்கள்!


நான் மறைந்தாலும்
என் மனதை விட்டு என்றுமே அழியாத
"அற்புத பூமி"
நான் வாழ்கின்ற என் கல்லூரி!

**ஏ.ஜான்சி ராணி**
பொருளாதாரம் இரண்டாமாண்டு

### பொன்மொழிகள்

உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளை விட சிறந்தது
- அன்னை தெரஸா

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிக மிக உயர்ந்தது பொறுமை.
- மாகாகவி பாரதியார்



# வெண்ணிலா

வெண்ணிலவே வெண்ணிலவே வெளிச்சம் தரும் வெண்ணிலவே! உன்னை
ரசிக்க நான் வந்தேன் என் அழகு வெண்ணிலவே!
இரவிலே நான் நடக்கையிலே உன்னைப் பின் தொடர்ந்தேன்
பகலிலே நீ உன்னை மறைத்து என்னை அழவைத்தாய்.
என்விழி உன்னைக் காணுகையில் என் முகம் தெரிகிறதே.
இரவிலே என் அச்சமோ பயமோ எங்கோ சென்றோடியதே.
சுற்றிச் சுற்றிப் பார்த்தேன் விண்மீன் கூட்டமடா
என்னடா இது என்னடா அதற்கு நீயே தலைவனடா
அற்புதம் சிறந்ததடா நீ உலகெங்கும் நிறைந்திருடா
உன்னைப் பற்றியே ஊர் எல்லாம் பேச்சு
உனக்காகவே அரண்மனை அரியணையில் ஓர் அரசாட்சி
எட்டமுடியாத உயர் உயரத்தில் நீயடா
ஏணி வைத்து ஏறுகின்றேன் ஏனோ
எட்டவில்லை எட்டவில்லை எட்டவேயில்லை ஆனாலும்
உன்னை என் கற்பனைக் கரங்களில் சுமக்கிறேனடா!

- மு.சித்ரா கமலி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு.

## ‘பகைவர்’ (ஒரு பொருள் குறித்த பல பெயர்கள்)

| | | | |
|---|---|---|---|
| 1. கலவார் | 2. பற்றார் | 3. அடையார் | 4. கூடலர் |
| 5. வணங்கார் | 6. பேணார் | 7. புல்லார் | 8. போற்றார் |
| 9. ஒன்னார் | 10. நன்னார் | 11. நள்ளாதார் | 12. செற்றார் |
| 13. கூடார் | 14. கருதாதார் | | |

கெ.ஜானகி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# விடுகதை

அ.உமா மகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு.



1. ஊரெல்லாம் மூடி இருக்கும். ஊறுகாய் பானை திறந்திருக்கும். அது என்ன?
2. பையில் இது இருந்தால் வேறு எதுவும் இருக்காது. அது என்ன?
3. பூவைப் பூவெடுத்து பூ மீது வைத்ததால் பூ போக மீதி பூ இருக்கும்.
4. உருவம் இல்லாத கல் ஐந்து. அது என்ன?
5. தாய் குப்பையிலே மகள் சந்தையிலே. அது யார்?
6. அடித்தால் அழுவான், பிரித்தால் சிரிப்பான். அவன் யார்?
7. கடுகு மடிக்க இலை இல்லை, யானை படுக்க நிழலுண்டு. அது என்ன?
8. பார்த்தவர்கள் இரண்டு பேர், எடுப்பவர்கள் ஐந்து பேர், சாப்பிட்டவர்கள் ஒருவர், யார்?
9. வாலினால் நீர் குடிக்கும், வாயால் பூச்சொரியும். அது என்ன?
10. சித்திரப் பின்னல் கோட்டைக்குள்ளே, போக வழி உண்டு, திரும்பி வர வழியில்லை. அது என்ன?

## விடைகள்

1. கிணறு
2. கிழிசல்
3. எறும்பு, கரும்பு, வரப்பு
4. கருக்கல், சறுக்கல், விக்கல், கொடுக்கல்,
5. வாங்கல்
6. வைக்கோல், நெல்
7. தேங்காய்
8. சவுக்கு மரம்
9. கண்கள், கைவிரல்கள், வாய்.
10. மின்விளக்கு
11. எலிப்பொறி

# தடகளம்



தடகளத்தில் ஓடினேன்!
தடம் பார்த்து ஓடினேன்.....
ஆயிரம் நபர்கள் பேசினர்
ஆயிரம் விதமாய்.....
நான் ஓடிய வேகத்தில்
கேட்கவில்லை என் காதில்
தடைகள் இருந்தது தடத்தில்
தவ்வி ஓடினேன் இலக்கடைய
நான் ஓடினேன் எனக்கானத்
தடத்தில்!
அத்தடத்தை மாற்றினேன்
எனக்கானதாய்!
ஒரு தடகள வீராங்கனையாய்....
நீங்களும் ஓடுங்கள்!
உங்களுக்கானத் தடத்தில்
வெற்றி கிட்டும்......

சி.அறிவுமதி
இளமறிவியல் இயற்பியல்
மற்றும் கணினி பயன்பாட்டியல்

# தூரிகைத் தூரல்கள்



சே.அகல்யா
கணக்கியல் மூன்றாமண்டு

# மௌவல்



மௌவல் எனச் சங்ககாலத்தில் வழங்கப்பட்ட மலரை இக்காலத்தில் மரமல்லி, என வழங்குகின்றனர். இது வீட்டில் வளர்க்கப்படும் மரம். இந்த மலரின் அரும்புகள் மகளிரின் பல் வரிசைக்கு உவமையாகக் கட்டப்படும். இப்பூ வருடத்திற்கு இருமுறை பூக்கும். இம் மலர்கள் மிகுந்த வாசனையைக் கொண்டது.

**சங்க நூல் குறிப்புகள் :-**

- குறிஞ்சி நில மகளிர் குவித்து விளையாடிய மலர்களில் ஒன்று மௌவல்.
- இரவில் பூக்கும் இந்த மலர் சுற்றுப்புறத்தை மிகுந்த நறுமணத்துடன் வைத்திருக்கும்.
- ஊர் ஓரப் பள்ளங்களில் இது வளர்க்கப்படும்.
- மல்லிகை, மௌவல், சண்பகம் ஆகியவை வெவ்வேறு மலர்கள்.
- சில பெண்களின் பற்களை இக்காலத்தில் அரிசிப்பல் எனப் பாராட்டுவர். இதனைச் சங்கப்பாடல்கள் மௌவலோடு ஒப்பிட்டுப் பாராட்டுகின்றன.
- வீட்டில் தட்டு வளர்க்கும் மௌவலை 'மனைநொச்சி' எனவும் வழங்கினர்.

**மௌவல் மரம்:-**

- இம்மரம் 18 முதல் 25 மீட்டர் வரை வளரக்கூடியது. 6 முதல் 8 வருடங்களில் மரமாகி 40 வருடங்கள் வரை இருக்கும். பல மண் வகைகளில் வளரக் கூடியவை.

'மனை நடு மௌவலோடு வாழ் முகை'

- நற்றிணை - 115

‘மனை இள நொச்சி மௌவல்
வால் முகைத் துணை நிரைத்து
அன்ன மா வீழ் வெண் பல்’ - அகநானூறு - 21-1

‘மாதரார் முறுவல் போல் மண்
மௌவல் முகை ஊழ்ப்ப’ - கலித்தொகை - 27-4


என சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் மௌவல் மலரின் சிறப்பை உணர முடிகிறது.

- அ.ஸ்டெல்லாமேரி

இளங்கலைத் தமிழ் இலக்கியம் - மூன்றாமாண்டு.

---

**பழமொழி** : காக்கை கரைந்தால்
விருந்தினர்கள் வருவார்கள்



**விளக்கம்** : இந்தப் பழமொழி எப்படி வந்தது என்றால் 4000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பழைமையானக் கதை. காலம் கடந்துகூட இன்றைய தலைமுறையினர் இந்தப் பழமொழியைச் சொல்வதுண்டு. நாமும் கேட்டிருக்கின்றோம்.

முன்பு கடல் வணிகம் தான் பெரிதளவில் பேசப்பட்டது. அப்போது திசை காட்டி கண்டுபிடிக்காத சமயம். நடுக்கடலில் கப்பல் புயலில் சிக்குவது, ஆழிப் பேரலையில் சிக்குவது என்று பிரச்சினைகள் சந்திப்பது உண்டு. அப்போது திசையைக் காட்டும் கருவியாக காக்கையைக் கூண்டில் அடைத்து வைத்திருப்பார்கள். பிரச்சினைகள் ஓய்ந்த பின் காக்கையை வெளியே எடுத்து பறக்க விடுவார்கள். அது கரையை நோக்கி பறக்கும். அப்பொழுது கரையில் இருப்பவர்களுக்குக் கடலில் இருந்து காக்கை வருவதைப் பார்த்து ஏதோ ஒரு கப்பலில் மக்கள் கரையை நோக்கி வருகிறார்கள் என்பதைப் புலப்படுத்தும். இதுவே இன்றைய காலத்தில் மருவி ‘காக்கை கரைந்தால் விருந்தினர்கள் வருவார்கள்’ என்று வழக்கத்தில் வந்து விட்டது.


அபர்ணா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு.


# புலவர்களைக் கண்டுபிடிப்போம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ஞா | ன | ச | ம் | ப | ந் | த | ர் |
| மா | ப் | த | ச | ண | அ | மே | ழ | ன் | கு |
| ணி | டு | வ | ம | ய | ப் | ரே | கோ | ந | ல |
| க் | வே | க | ல | வ | ப | ங | ர | ய | சே |
| க | சு | ந் | த | ர | ர் | ம | ஞ | ம | க |
| வா | த் | ஞ | ல | ற | ய | க | ட | ப | ரா |
| ச | து | க | வ | ப | தி | ல் | பி | த | ழ் |
| க | ப | ட் | டி | ன | த் | தா | ர் | ல | வா |
| ர் | க | ஆ | று | மு | க | நா | வ | ல | ர் |
| கா | ல் | டு | வெ | ல் | அ | ம் | ர | ந | ய |

1. குலசேகராழ்வார்
2. ஆறுக நாவலர்
3. கபிலர்
4. திருஞானசம்பந்தர்
5. அப்பர்
6. சுந்தரர்
7. மாணிக்கவாசகர்
8. பட்டினத்தார்
9. அகத்தியர்



# கொரோனா வைரஸ்



கொரோனா வைரஸ் ஒரு நுண் உயிரி. உயிர்க்கொல்லி நோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. கொரோனா வைரஸ் பாதித்தால் சாதாரண சளி முதல் சார்ஸ், மெர்ஸ், நிமோனியா போன்ற தீவிர நோய்கள் ஏற்படும். இறுதியில் உயிரிழப்பு ஏற்படும். கொரோனா வைரஸ் தாக்கினால் காய்ச்சலுடன் இருமல், மூச்சுத் திணறல் உள்ளிட்ட சுவாசக் கோளாறுகள் ஏற்படும். தொண்டை வீங்குவதும், உணவை விழுங்குவதில் சிரமமும் ஏற்படும். சில நேரங்களில் நிமோனியா போன்ற விஷக் காய்ச்சல் ஏற்படக் கூடும். பிராங்கைட்டிஸ் (bronchitis) எனப்படும் நுரையீரல் நோயும் ஏற்படக்கூடும். ஒட்டு மொத்த சுவாசப் பாதையும் பாதிக்கப்பட்டு, SARS (Severe Acute Respiratory Syndrome) எனப்படும் உயிரைப் பறிக்கும் மூச்சுத் திணறல் நோய்கள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

உயிரைப் பறிக்கும் கொரோனா வைரஸ் தொற்று நோயை எப்படிக் கண்டுபிடிப்பது? பரவாமல் தடுப்பது எப்படி? கொரோனா வைரஸ் பரவும் முறை பாதிக்கப்பட்ட நபரின் இருமல் அல்லது தும்மல் மூலம் பரவும், பாதிக்கப்பட்ட நபர்களைத் தொடுவதின் மூலமும் பரவும் தன்மை கொண்டது. எனவே, மருத்துவமனையிலும் அவர்களைத் தனிமைப்படுத்தி உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். கொரோனா வைரஸ் வராமல் தற்காத்துக் கொள்வது எப்படி?

ஒவ்வொரு முறை எதையேனும் உண்பதற்கு முன்பு கையை நன்றாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். டெட்டால், சாவ்லன் போன்ற கிருமி நாசினி சோப்புகள் மற்ற சோப்புகளை விட ஓரளவு மேலானவை. கை, கால் விரல் நகங்கள் நன்றாக வெட்டப்பட்டிருக்க வேண்டும். அந்தரங்க சுத்தம் மற்றும் உணவுச் சுத்தம் பேணப்பட வேண்டும். நன்கு காய்ச்சி வடிகட்டிய நீரையே அருந்த வேண்டும்.

இறைச்சி, முட்டை, மீன் முழுமையாக வேகவைத்த பின்னரே உண்ணுமாறு WHO கூறுகிறது. எனவே முக்கால் வேக்காட்டு இறைச்சியை உண்பதைத் தவிர்க்கவும். குறிப்பாக அரைவேக்காட்டு முட்டையை உண்ண வேண்டாம்.

ர.சங்கீதா
இளங்கலைத் தமிழ் இலக்கியம் மூன்றாமாண்டு




## பாரதியார்

பி.லோகஸ்ரீ
வணிகவியல் முதலாமாண்டு

தன்னலமற்ற தமிழ்ப் பித்தனாகத் திகழ்ந்து
செந்தமிழ் தேர்ப்பாகனாக விளங்கி,
கரிய மீசையைச் செருக்குடன் முறுக்கி,
சாதி என்னும் போர்வையை நீக்கி
கண்ணம்மாவாக இறையருளைக் காட்டி
குயிலின் பாட்டாக கவியுணர்த்தி
சுட்டெரிக்கும் வரிகளால் தீமூட்டி
ரௌத்திரம் பழகு என்று எங்களைப்
புதுமைப் பெண்களாய் மாற்றிய நீ!
எங்களுக்குப் புதிய ஆத்திச்சூடி!
எட்டயபுரத்தில் முளைத்த நீ!
எட்டா புகழைப் பெற்றுத் தந்தாய் தமிழுக்கு
விருட்சகமாய் வளர்ந்து நிற்கும் உன் அறநெறிகள்!
அனைத்திடமும் அமுதாய் வழிந்தோடும் உன்
கவிதை வரிகள்!
உம்மிடத்து மயங்கி மாற விரும்புகிறோம் தமிழ்த்
தொண்டர்களாய்!
என்றும்! சிம்மாசனத்தின் தமிழரசனாய் நீ!
தூதாய் விடுகிறேன் என் உயிரானத் தமிழை!
தமிழ்த் தொண்டர்களாய் மாறும் இச்செய்தியை
வாங்கிக்கொள்!
உன் பொத்திய காதுகளில்!!.....

தமிழ்க் காதலியாய் தமிழரசனிடம் தூதுவிடும் புதிய
“தமிழ்விடுதூது!!!”

# சொல் விளையாட்டு



1. நம் நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் யார்?
2. நம் நாட்டின் முதல் துணைக் குடியரசுத் தலைவர் யார்?
3. நம் நாட்டின் முதல் பிரதம மந்திரி யார்?
4. நம் நாட்டின் முதல் ஆளுநர் யார்?
5. நம் நாட்டின் முதல் முதலமைச்சர் யார்?

ரம்யா.மு
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு.

# பாரதிதாசன்



*புதுச்சேரியில் சுப்புரத்தினமாய் முளைத்து*
*11 வயதில் தமிழ்ப் புலவனாய் வளர்ந்து*
*'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என ஆரம்பித்து*
*இசையமுதாய் தமிழர்களுக்கு விருந்தளித்து!*
*பெண்களின் வாழ்விற்கு குடும்ப விளக்கேற்றி*
*உயிரின் இயற்கையை விருந்தளித்து*
*அழகின் சிரிப்பை அழகாய் பகுத்தூட்டி*
*தமிழச்சியின் கத்தியை வெளிச்சமிட்டுக் காட்டி*
*தமிழ்க் காதலைச் சுவையுற செவிக்குள் திணித்த*
*தமிழ்ப் பித்தனும் நீதானோ!!!*

ஹ.யமுனா
கணிதவியல் முதலாமாண்டு.

# கணிதப் புதிர்கள்

1. விடை 100 வர வேண்டும்
   நிபந்தனை :
   - பூச்சியம் அழுத்தக் கூடாது
   - 1,3,9 பொத்தானைத் தான் அழுத்தனும். மற்றும் 2 செயலியைத் தான் பயன்படுத்தனும்.

2. பதினொன்றோடு இரண்டைச் சேர்த்தால் ஒன்றாகும். எப்படி?

3. 5 கொக்குகள் 5 நிமிடத்தில் 5 மீன்களைப் பிடிக்கும். அப்போது 50 கொக்குகள் 50 நிமிடத்தில் எத்தனை மீன்களைப் பிடிக்கும்?

**ஹ.யமுனா**
கணிதவியல் முதலாமாண்டு

**விடை :**

1. (i) $3 \times 33 = 99$ (ii) $99+1=100$
2. 11 மணி நேரம் + 2 மணி நேரம் = 1 மணி.
3. ஒரு கொக்கு 5 நிமிடத்தில் 1 மீனைப் பிடிக்கும்
   50 கொக்குகள் 5 நிமிடத்தில் 50 மீன்களைப் பிடிக்கும்.
   50 நிமிடத்தில் 50 கொக்குகள் 50x10=500 மீன்களைப் பிடிக்கும்.



# உதரே ஒட்டாத குறள்



*"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்"*

குறள் - 341

**பொருள் :**

எந்தெந்தப் பொருள்களில் எல்லாம் மனமானது விலகி இருக்கிறதோ, அந்தப் பொருள்களால் நமக்குத் துன்பம் கிடையாது. மனது ஒட்டாமல் இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்தக் குறளை உச்சரிக்கும்போது உதடுகள்கூட ஒட்டாது. ஒதடு ஒட்டாமல் உச்சரிக்கக்கூடிய ஒரே குறள் இது மட்டுமே.

**நா.லாவண்யா**
ஆங்கில இலக்கியம் இரண்டாமாண்டு.

# *இயற்கையன்னை*



சேய், கொடியவன் என்றால்
பெற்ற தாயும் வெறுப்பாள்!
ஆனால்
சேய் எவ்வாறு இருந்தாலும்
அள்ளி அனைக்கும் தாய்
இயற்கை அன்னைதானே!
அப்படிப்பட்ட தாயின்
சொத்தை அழித்து தனக்குச்
சொத்து சேர்த்துக்கொள்ளும்
அற்ப புத்தியடையவர்கள் தான்
நாம்!
தாயின் மடியில் தவழும்
குழந்தையைவிட
இயற்கை அன்னையின் மடியில்
தவழும் குாந்தையே
வாழ்வை எளிதாய்
அறிந்து கொள்கிறது.

**வே.அபிநயா**
ஆங்கில இலக்கியம்
முதலாமாண்டு.

# தூரிகைத் தூரல்கள்



வரைவு : **பெ.சாந்தி**

**தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு**

# தூரிகைத் தூரல்கள்



### பொன்மொழிகள்



அறிவுத் தேவையை விட கவனக்குறைவு தான் அதிக துன்பத்தை உண்டாக்கி விடுகிறது.

*- வின்ஸ்ட்டன்ட் சர்ச்சில்.*



மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்

*- பெர்னார்ட்ஷா.*



இந்த உலகமே உன்னைத் திருப்பிப் பார்க்க வேண்டுமென்றால், நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே

*- ஹிட்லர்.*



துன்பத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது

*- காமராஜர்*

# தூரிகைத் தூரல்கள்



**அ.ஜாஸ்மீன்**
கணிதவியல் மூன்றாமாண்டு

# பிப்ரவரி மாதச் சிறப்பு தினங்கள்

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 4 | - | உலகப் புற்றுநோய் தினம் |
| பிப்ரவரி 7 (1902) | - | தேவநேயப்பாவாணர் பிறந்த தினம் |
| பிப்ரவரி 10 | - | உலகக் குடைத் தினம் |
| பிப்ரவரி 11 (1847) | - | தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்த தினம் |
| பிப்ரவரி 12 (1824) | - | தயானந்த சரஸ்வதி பிறந்த தினம் |
| பிப்ரவரி 13 (1879) | - | சரோஜினி நாயுடு பிறந்த தினம் |
| பிப்ரவரி 14 | - | உலகக் காதலர் தினம் |
| பிப்ரவரி 18 (1836) | - | ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த தினம் |
| பிப்ரவரி 19 (1855) | - | உ.வே.சாமிநாத ஐயர் பிறந்த தினம் |
| பிப்ரவரி 24 (1948) | - | ஜெ.ஜெயலலிதா பிறந்த தினம் |
| பிப்ரவரி 28 (1928) | - | சர்.சி.வி.இராமன் நினைவு தினம் (தேசிய அறிவியல் தினம்) |
| பிப்ரவரி 29 (1896) | - | மொரார்ஜி தேஸ்ராய் பிறந்த தினம் |

**ஹே.அர்ச்சனா**
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# தமிழ்த்துறை நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 20 சனவரி 2020 | - | ஆய்வரங்கம் |
| 25 சனவரி 2020 | - | இலக்கிய அரங்கம் - 6 |
| 28 சனவரி 2020 | - | குறள் விழா |



வரைவு : சு.தமிழ்ச் செல்வி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு